Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 04 | 18-05-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 89

வவுனியா நகரில் தரங் குன்றா தங்க நகைகளுக்கு நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்

கணேசா நகையகம்

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா.

(சி-7865)

## விதார்கெல்ஹேசன் - தமிழ்ச்செல்வன் சந்திப்பு

# முட்டுக்கட்டைகளைத் தளர்த்தி பேச்சுக்களை தொடர்ந்து முன்னெடுப்பது குறித்து ஆராய்வு!

### சுமார் இரு மணிநேரம் நடந்த சந்திப்பு

(கிளிநொச்சி)

**தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடன் நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை களைத் தளர்த்தி தொடர்ந்தும் முன்னேற்றகரமாக நகர்த்திச் செல்வது தொடர்பாக நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.**


கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகத்தில் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள், சமாதான செயலக செயலாளர் புலித்தேவன், மற்றும் ஜோர்ச் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நோர்வே தரப்பில் நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசனுடன் சிறிலங்காவுக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ்பிரஸ்ற்கார், தூதரக இரண்டாம் செயலர் தோமஸ் ஸ்ராங்லண்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, நாம் தற்போது சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள ஸ்தம்பித நிலையை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதான நடவடிக்கைகளை சுமுகமான சூழலினூடாகத் தொடர்ந்து இட்டுச் செல்வது தொடர்பாக இரண்டு

(08ஆம் பக்கம் பார்க்க)



## நோர்வே அமைச்சர் மீண்டும் நாளை கிளிநொச்சி வருவார்

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் மீண்டும் நாளை வன்னி வந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் வன்னிக்கு வந்து தமிழீழத் தேசித் தலைவர் அவர்களைச் சந்தித்துப் பேச்சுக் களை நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுக்களை அடுத்து சிறிலங்காப் பிரதமருடன் பேச்சுக் களை நடத்திய நோர்வே குழவினர் நேற்றைய தினம் மீண்டும் வன்னி திரும்பி தமிழீழ அரசியல்துறைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

### - புலிகளை ஓரம் கட்டிவிட்டு அரசு -

## டோக்கியோ மாநாட்டுக்குச் செல்லுமாயின் அரசிற்கான ஆதரவை விலக்குவோம்

### பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

(யாழ்ப்பாணம்)

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் புலிகளை ஓரம் கட்டி விட்டு அரச பிரதிநிதிகள் கலந்து கொள்வார்களேயானால் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொள்ளும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜப்பானில் இடம் பெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் புலிகள் கலந்து கொள்வதாக இருந்தால் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிட்ட பல்வேறு விடயங்களையும் அரசு நிறைவேற்ற வேண்டும். இதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு இராஜதந்திரிகளுடனான சந்திப்பை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

(08ஆம் பக்கம் பார்க்க)

### - ஜப்பான் உதவி வழங்கும் மாநாட்டில் -

## புலிகள் கலந்து கொண்டால் இந்தியா பங்கேற்காதாம்

ஜப்பானில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் புலிகள் கலந்து கொண்டால் தாம் அதில் கலந்து கொள்ளப் போவதில்லை என இந்திய அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய அரசாங்கம் இது குறித்த முடிவை முன்னரே எடுத்துள்ளதாகவும் அமெரிக்காவில் நடைபெற்ற மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ளாத காரணத்தினாலேயே தாம் கலந்து கொண்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, நேற்று சிறிலங்காவிலுள்ள ஜப்பான் தூதரகம் விடுத்த பத்திரிகைச் செய்தியில் எதிர்வரும் 9ஆம்,10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள மாநாட்டில் இலங்கை முழுவதற்குமான புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென 300கோடி அமெரிக்க டொலர் கோரப் படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

ஓட்டமாவடியில் வைத்து ஆட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாதோர் ஆறு பேரால் கடத்திச் செல்லப்பட்ட இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

கிண்ணையடியில் இவரது சடலம் நேற்று முன்தினம் காலை மீட்கப் பட்டது. வியாழக்கிழமை நள்ளிரவு இவர் கடத்திச் செல்லப்பட்டார்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த ஹூசைன் (வயது 27) என்பவரே சடலமாக பீட்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் குறித்து மேலதிக விபரங்கள் எதுவும் தெரியவில்லை

## சதீஸ் நம்பியார், ஜேக்கப்புடன் சனாதிபதி நீண்டநேரம் பேச்சு

(கொழும்பு)

சிறிலங்காவுக்கு விஜயம் செய்துள்ள ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரி சதீஸ் நம்பியார் மற்றும் இந்திய ஓய்வு பெற்ற துணைக் கடற்படைத் தளபதி பி.ஜே. ஜேக்கப் ஆகியோர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

சனாதிபதி மாளிகையில் இச்சந்திப்பு நீண்ட நேரம் இடம் பெற்றுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்தும் கடற்புலிகளின் அங்கீ

(08ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் நாடுதிரும்பிய பின்பே சனாதிபதிக்குப் பதில்

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையினை சனாதிபதி பொறுப் பேற்றதையடுத்து எழுந்துள்ள அரசியல் சர்ச்சை தொடர்பில் சனாதிபதி பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்துக்கு நாடு திரும்பியதுமே பிரதமர் பதில் அனுப்ப உள்ளார்.பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருநாள் பயணம் ஒன்றை மேற் கொண்டு இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள கொச்சினுக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார்.

அவர் நாடு திரும்பியதுமே சனாதிபதிக்கு பதில் கடிதத்தினை அனுப்பவுள்ளார்.

## யாழ்.இல் சமாதானப் பேரணி நடத்துவது காலத்திற்குத் தேவையில்லாத ஒன்று

### யாழ்.உயர்தர மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ். இல் சமாதானப் பேரணி நடத்துவது இன்றைய காலத்தில் தேவையில்லாத ஒன்று என யாழ். உயர் தர மாணவர் ஒன்றியம் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சமாதானத்திற்கும் அமைதிக்குமான புனித யாத்திரையில் தடம்பதித்து இன்னும் அவற்றின் சிகரத்தை எட்டும் அளவிற்கு மக்கள் இருக்கின்றார்கள். மக்களுக்கான உந்து சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட்டு வருகின்றனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

### - சமாதானப் பேச்சுக்கள் தடையின்றித் தொடர -

## யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் உண்ணாவிரதமும் பேரணியும்

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கில் நிரந்தர சமாதானம் வேண்டியும், சமாதானப் பேச்சுக்கள் தடையின்றித் தொடர வேண்டும் என்று வலியுறுத்தியும் யாழ். இலும், மட்டக்களப்பிலும் உண்ணாவிரதமும் பேரணியும் நடத்தப்பட்டன.

மட்டக்களப்பில் தென்னிலங்கை உட்பட நாட்டின் பல பாகங்களைச்

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஒப்பந்தத்தை அசட்டை செய்யும் அரசுடன் பேசுவதன் மூலம் என்னதான் கிடைக்கும்?

**- வவுனியா வடக்கு வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம்**

**தமிழீழ விடுதலைப்புலிகள் தாம் பேச்சுக்களில் பங்கு பற்றாது இடைவிலகுவது என்று தெரிவித்துள்ளதை நாம் முழுமனதுடன் வரவேற்கிறோம். ஏனெனில் இவ்வளவு அழிவுகள்,துன்பங்களைச் சந்தித்த நாம் பல அர்ப்பணிப்பின் ஊடாக எழுதப்பட்ட ஒப்பந்தத்தை அசட்டை செய்யும் அரசுடன் பேசுவதன் மூலம் என்னதான் கிடைக் கப்போகிறது? இவ்வாறு வவுனியா வடக்கு வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் கேள்வி எழுப்பியுள்ளது. இது தொடர்பாக வெளியிடப் பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;**

நீண்ட காலமாக தமிழ் மக்களிற்கான உரிமைகள் மறுக்கப்பட்டு தமிழ் மக்களும் இம் மண்ணின் பிரஜைகள் என்பதை மறந்து சிங்கள அரசு தமிழ் மக்களை ஏமாற்றியே வந்தது. தமிழர்கள் தமது உரிமைகளைத் தருமாறு காலம் காலமாகக் கேட்டு வந்தபோது அவ்வப்போது ஆட்சி செய்த சிங்கள அரசுகள் தமது அரசியல் நலனைக் கருத்திற் கொண்டு ஏதாவது ஒரு பேச்சு, ஒப்பந்தம் என நடைமுறைப் படுத்தும், பின்னர் இதனை சிங்கள அரசின் ஒரு பகுதியினர் எதிர்ப்பார்கள். உடனே பேச்சு நிறுத்தப்படும், ஒப்பந்தம் கிழிக்கப்படும், இன அழிப்பு நடவடிக்கைகள் தொடரும், இதன்பின் தமிழன் நிர்க்கதிக்கப்படுவான் இது தான் தமிழர்கள் சிங்கள அரசிடம் இருந்து கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட மறக்கமுடியாத பாடம்.

இப்பாடங்களை மாற்றவேண்டும் என்பதற்காக தமிழ் மக்கள் ஆயுதங்களைத் தூக்கிப் போராட ஆரம்பித்தார்கள். இதன்பின்னும் சில பேச்சுக்கள், ஒப்பந்தங்கள் என்பன நடைபெற்றன. இதில் எதுவித பிரயோசனமும் தமிழ் மக்களுக்கு கிட்டாமலே அரசு இழுத்தடித்து அவற்றை நிராகரித்து, போரை ஆரம்பித்து தமிழ் மக்கள்மீது சொல்லொண்ணாத் துயரங்களை ஏற்படுத்தியது.,

இதன் உச்சக்கட்ட மாற்றம் தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் பலம் சார் வெற்றித்தாக்குதல்கள். இதன் மூலம் இனி ஒருபோதும் இராணுவ ரீதியாகத் தமிழர்களை வெல்லமுடியா என்ற நிலை தோன்றியபோது தான் சிங்கள அரசு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பித்தது. யுத்தநிறுத்த ஒப்பந்தம் மேற்கொண்டபோது உலகின் நடுநிலையோடு ஆரம்பிக்கப் பட்டதால் தமிழ் மக்களின் மனங்களில் கடந்த கால நிகழ்வுகளின் நம்பிக்கையீனம் குறைந்து ஒரு சிறு நம்பிக்கை துளிர்விட்டது. உடன்படிக்கையில் எழுதப்பட்டவையும், பேச்சுக்களில் பேசப்பட்டவையும் மக்கள் மனங்கொண்டார்கள், விடயங்கள் நடைபெறும் காலங்களை கணக்கிட்டார்கள். ஆனால் நடந்ததுதான் என்ன பழைய குருடி கதவைத் திறவடி என்பது போல கதை மாறத் தொடங்கியது. எழுதப்பட்டவையும், பேசப்பட்டவையும், அரசு செய்து முடிக்காது காலத்தை கடத்துவதிலேயும், உரிமைகளை மறுப்பதிலேயும் தான் கவனம் செலுத்துகின்றது.

எனவே தான் தமிழீழ விடுதலைப்புலிகள் தாம் பேச்சுகளில் பங்குபற்றாது இடைவிலகுவது என்று தெரிவித்துள்ளார்கள். இதனை நாம் முழுமனதுடன் வரவேற்கின்றோம். ஏனெனில் இவ்வளவு அழிவுகளை, துன்பங்களை சந்தித்த நாம் பல அர்ப்பணிப்பின் ஊடாக எழுதப்பட்ட ஒப்பந்தத்தை அசட்டை செய்யும் அரசுடன் பேசுவதன் மூலம் என்னதான் கிடைக்கப் போகின்றது. எனவே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமி ழீழவிடுதலைப் புலிகள் ஜப்பான் பிரதிநிதிகளிடமும், நோர்வேப் பிரதிநிதிகளிடமும் கேட்டுக் கொண்டது போல் பேசப்பட்டவையும், எழுதப்பட்டவையும் நிறைவு செய்யப்பட்டு தமிழ் மக்களிற்கான நிர்வாக அலகை வழங்கும் வரை இப்பேச்சுக்க ளில் தமிழீழ விடுதலைப்புலிகள் பங்குகொள்ளாது விலகவேண்டும் என்று தமிழீழ மக்கள் சார்பாக வேண்டிக் கொள்வதுடன் அரசு பேச்சுக்களைத் தொடர உடனடியாக மேற்கொள்ள வேண்டிய விடயங்களைப் பூர்த்திசெய்து தமிழ் மக்களிற்கு நிரந்தரத் தீர்வினை வழங்க முன்வர வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சோ)

## புதிய கிளை திறப்பு


(யாழ்ப்பாணம்)

“மீண்டும் இலங்கையைக் கட்டியெழுப்புவோம்” என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியின் இரண்டு புதிய கிளைகள் யாழ்ப்பாண த்தில் திறந்து வைக்கப்பட்டுள் ளன. வடக்கு கிழக்கில் நிலவும் அமைதிச் சூழ்நிலை காரணமாக இந்த இருகிளைகளும் மானிப்பாயிலும், திருநெல்வேலியிலும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

# யாழ். உதைபந்தாட்ட லீக் தெரிவு அணி நேற்றைய போட்டியில் வெற்றி

(அலுவலக செய்தியாளர்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தெரிவு அணிக்கும், கிளிநொச்சி லீக்கின் தெரிவு அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தெரிவு அணி சமநிலை உடைப்பு மூலம் 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.





நேற்று பிற்பகல் 4.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் மேற்படி அணிகளுக்கிடையில் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டு சம நிலையில் இருந்தன. அதனையடுத்து வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதைமூலம் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தெரிவு அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இப்போட்டியின் மத்தியஸ்தராக இ. ஆனல்ட்டும், உதவி மத்தியஸ்தர்களாக கே. றின்ஸ்ரன், கி. சுரேஸ் ஆகியோர் கடமைபுரிந்தனர்.

ஆரம்ப நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை வன்னி மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜா ஏற்றி வைத்தார்.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, கிளி. மாவட்ட விளையாட்டு அதிகாரி சு. கனகராசா மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள், பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஆழியவளையில் சிறப்புற நடைபெற்ற தியாகி திலீபன் மருத்துவமனை ஆண்டு விழா

வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் முதலாம் ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் மருத்துவமனை வளாகத்தில் சிறப்பாக நடாத்தப்பட்டது.

பிற்பகல் 3.00 மணியளவில் வடமராட்சி வலயக் கல்விக் கழகப்பொறுப்பாளர் தாயகன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில், பொது ஈகச்சுடர்களை த.பு. கழகத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் வரன், மாவீரர் கப்பல் கப்டன் சிலம்பரசனின் தந்தையாரான வேலாயுதப்பிள்ளை ஆகியோர் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை தியாக தீபம் திலீபன் மருத்துவசேவைப் பொறுப்பாளர் ஈழச்செல்வன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து தியாக தீபம் திலீபன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கடற்புலிகளின் மகளீர் அமைப்பின் சிறப்புத் தளபதி விடுதலை ஈகச்சுடர் ஏற்றிவைத்தார். மலர் மாலையினை த.பு. கழகத்தின் அவுஸ்திரேலிய நாட்டு இணைப்பாளர் சந்துரு அணிவித்தார்.

வரவேற்புரையினை ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின் அதிபர் திரவியராசா நிகழ்த்தினார். தலைமை உரையைத் தொடர்ந்து சிறப்புரைகளை ஆழியவளை கிராம அலுவலர் இ. நடராசா, தமிழீழ ஊடக வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் அன்பரசன், த.பு. கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. றெஜி, கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோர் நிகழ்த்தினர்.

நன்றியுரையினை ஆழியவளை திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் ஈழவாணி நிகழ்த்தினார்.

இந்நிகழ்விற்குத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஆகியோரும் வருகை தந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் திலீபன் மருத்துவ மனை நிரந்தரக் கட்ட டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் இடம்பெற்றது.

இவ் அடிக்கல்லினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. றெஜி நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகள் அமைப்பின் துறைசார்ந்த பொறுப்பாளர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (11)


## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித்தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3256)

### தேவை

வயோதிப மாதுவை பராமரிக்க பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். விபரங்கட்கு தீன்சுவையகம் கண்டி வீதி மாங்குளம். (சி-7872)

### தேவை

தேர்ச்சி பெற்ற சமயலாளர் தேவை. சம்பளம் பேசித்தீர் மானிக்கலாம். தீன்சுவையகம், கண்டி வீதி மாங்குளம். (சி-7873)


# ஏழு வருடகாலம் இரவில் மூடப்பட்டிருந்த பௌத்தாலோகமாவத்த திறக்கப்பட்டது.

(கொழும்பு)

யுத்தத்தின் காரணமாக ஏழு வருடகாலமாக இரவு நேரங்களில் மூடப்பட்டிருந்த கொழும்பு பௌத்தாலோக மாவத்த முழுமையாக 'வெசாக்' நிகழ்ச்சிகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

லட்சக்கணக்கான மக்கள் பௌத்தாலோக மாவத்தைக்குச் சென்று நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கின்றனர்.

அத்துடன் கொழும்பு நகரசபைக்கு முன்னால் நடைபெறும் தேசிய வெசாக் வெளிச்சக்கூடு கண்காட்சியைப் பார்வையிடுவதற்கும் பெருமளவான மக்கள் செல்கின்றனர்.

# ஒன்பது கொலைகளுடன் தொடர்பு; 9 பாதாள உலகத்தினர் கைது

(கொழும்பு)

ஒன்பது கொலைகள் மற்றும் பல குற்றச்செயல் களுடன் தொடர்புபட்ட ஒன்பது பாதாள உலக கோஷ்டியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்ட தாக கொழும்பு குற்றப்புலனாய் வுத்துறையினர் தெரிவித் துள்ளனர்.

சந்தேக நபர்கள் கொள் வனவு செய்திருந்த நவீன மோட்டார் சைக்கிள், கையடக்கத் தொலை பேசி என்பனவும் கைப்பற்றப் பட்டுள்ளன.

இவர்கள் வலஸ்முல்ல, பெலியத்த, டிக்குவெல்ல ஆகிய பிரதேசங்களில் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் செய்த ஒன்பது கொலைகளும் வலஸ் முல்ல பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது. இவர்களிடம் இருந்து அறுபது ஆயிரம் ரூபா பணமும் 150 கிராம் தங்கமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## புஷ் வேட்புமனு தாக்கல்!

(வாஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி பதவிக்கு தற்போதைய அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மீண்டும் போட்டியிடவுள்ளார்.

இதற்கான தனது வேட்பு மனுவை அவர் அமெரிக்க கூட்டமைப்பு தேர்தல் ஆணையகத்திடம் நேற்று முன்தினம் தாக்கல் செய்தார்.

# ஈராக்கில் பொருளாதாரத் தடைநீக்க விவாதம்; ஐ.நா.பாதுகாப்பு சபைக்குள் கருத்து முரண்!

**ஈராக்கில் அமுலிலுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்குவது தொடர்பான விடயத்தில் பெரும் கருத்துமுரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன. ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் இது குறித்து பெரும் வாதப்பிரதிவாதங்கள் உருவாகியுள்ளன.**

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஈராக் மீது விதிக்கப்பட்டுள்ள ஐ.நா.வின் இறுக்கமான பொருளாதாரத் தடையை நீக்குவது பற்றிய விவகாரம் பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்க தலைமையிலான யுத்தம் முடிவுபெற்று ஈராக் அதனது பூரணகட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதன் பின்னர் இது குறித்த விவகாரங்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

ஈராக், குவைத்தை ஆக்கிரமித்த வேளை இடம்பெற்ற யுத்தத்தையடுத்து ஈராக் மீதான பொருளாதாரத் தடையை ஐ.நா. கொண்டுவந்திருந்தது. ஆரம்பத்தில் இறுக்கமான நடைமுறைகள் இருந்து வந்த போது ஈராக்கிய மக்களினிற்கான மனிதாபிமான நடவடிக்கைகளின் பொருட்டு உணவிற்காக எரிபொருளை விற்க ஓரளவு இத்தடை தளர்த்தப்பட்டு இன்று வரை கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக அமுலில் உள்ளது. இந்நிலையில் பொருளாதாரத் தடையை நீக்குவது தொடர்பாக அமெரிக்கா, ஐ.நா. பாதுகாப்புச்சபைக்கு அளித்துள்ள தீர்மானம் குறித்து கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன.

அமெரிக்காவின் தீர்மானத்தில் பல முக்கிய மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று ரஷ்யா, சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஈராக்கிற்கான எண்ணெய்க்கு உணவுத்திட்டத்தை கட்டம் கட்டமாக விலக்கிக்கொள்ளும் நடைமுறையில் மாற்றம் வேண்டும் என்றும் ஈராக் நிர்வாகத்தில் ஐ.நாவின் பங்கு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் இந்த நாடுகள் கோரியுள்ளன.

ஈராக் நிர்வாகத்தில் அமெரிக்க இராணுவத்தினரின் நடவடிக்கைகள் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்றும் இந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஈராக்கிற்கு எதிராக ஐ.நா. சபை விதித்துள்ள தடைகளை விலக்கிக் கொள்வதற்கு வகை செய்யும் திருத்தியமைக்கப்பட்ட தீர்மானம் அமெரிக்கா வினால் கடந்த வியாழனு பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக் கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் மீது அடுத்த வாரம் ஐ.நா.பாதுகாப்பு சபையில் வாக்கெடுப்பு நடத் தப்பட அமெரிக்கா விரும்பு கின்றது.

ஈராக்கின் எண்ணெய் வளங்கள் மீது முழுக்கட்டுப்பாடும், அதிலிருந்து கிடைக்கும் வருவாயை எவ்வாறு செலவிடுவது என்பது பற்றி முடிவெடுக்கும் அதிகாரமும் அமெரிக்கா உள்ளிட்ட நேச நாடுகள் வசம் வழங்கப்படுவதற்கு இந்தத் தீர்மானம் வகை செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தான் சன்னி முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கானோர் கராச்சியில் பேரணியாகச் சென்று சமய விழாவொன்றைக் கொண்டாடினர். இவ்வாறான பல ஊர்வலங்கள் பாகிஸ்தான் முழுவதும் இவ்வாரம் நடைபெற்றது.

## மக்காவில் தீ விபத்து; 14 யாத்திரிகர் பலி!

(ரியாத்)

சவூதி அரேபியாவின் புனித நகரான மக்காவில் இடம்பெற்ற தீ விபத்தில் 14 முஸ்லிம் யாத்திரிகர்கள் பலியானதுடன் மேலும் 43 பேர் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

எரிகாயங்களுக்கு உள்ளானோரில் தீயணைக்கும் பிரிவைச் சேர்ந்த நான்கு பேரும் அடங்குகின்றனர்.

முஸ்லிம் யாத்திரிகர்கள் தங்கியிருந்த விடுதியில் தற்செயலாக ஏற்பட்ட தீ விடுதி முழுவதும் பரவியதனால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

விபத்தில் மரணமடைந்தோர் மற்றும் காயமடைந்தோர் எந்த நாடுகளை சேர்ந்தவர்கள் என்ற விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

## மொறோக்கோவில் வர்த்தக தலைநகர் தொடர் தற்கொலைத் தாக்குதலால் சிதைவு!

### 40 பேர் பலி; 60 பேரளவில் படுகாயம்!

வடமேற்கு ஆபிரிக்க நாடான மொரோக்கோவின் வர்த்தக தலைநகரான கார்தாத லங்காவில் ஐந்து தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 40 பேர் பலியாகியுள்ளனர். 60 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இத்தொடர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பலியானவர்களில் பத்துப்பேர் தற்கொலைக் குண்டு தாரிகளாவர்.

இது சர்வதேச பயங்கரவாதிகளின் சதிவேலையாகும் என மொரோக்கோ உள்துறை அமைச்சர் முஸ்தபா சாகித் தெரிவித் துள்ளார்.

இங்குள்ள பெல்ஜியம் தூதரகம், யூதர்களின் மையம், ஒரு பிரபல விடுதி ஆகியவற்றில் கார் வெடிகுண்டுகள் வெடித்தன.

இந்தத் தாக்குதல் அண்மையில் சவூதி அரேபியாவில் நடத்தப்பட்ட தாக்குதலை ஒத்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மொரோக்கோ அமெரிக்க ஆதரவு நாடாகும். ஆனால் ஈராக் பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணப்படவேண்டும் என்று அது கோரி இருந்தது.

## கொங்கோவில் போர் நிறுத்தம் அமுல் ஐ.நா. உதவியுடன் பேச்சுவார்த்தை!

கொங்கோ சனாதிபதியும் கொங்கோவின் கிழக்குப் புற நகரில் தாக்குதல் நடத்திவரும் கிளர்ச்சி இராணுவத் தலைவர்களும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதன்படி நேற்றுக் காலை தொடக்கம் யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் விடுத்த வேண்டுகோளில்,

யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து மேற்கொள்ள இருக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் ஆயிரம் வீரர்கள் கொண்ட அமைதிப் படை ஒன்று உருவாக்கப்படும். பாதுகாப்புச் சபை இந்தப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித் துள்ளது எனத் தெரிவித்தார்.

## கைதிகள் விடுதலை தாமதம்!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியக் கைதிகள் விடுதலை நேற்று நடைபெறவில்லை. 20 இந்திய கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என பாகிஸ்தான் அறிவித்திருந்தது. இந்திய-பாகிஸ்தான் எல்லைப்பகுதிகளில் ஒன்றான வாகாவில் இவர்கள் விடுவிக்கப்பட இருந்தபோதிலும் பாகிஸ்தானின் பல்வேறு சிறைகளிலிருந்து இவர்களை எல்லைப் பகுதிக்கு அழைத்து வருவதில் தாமதங்கள் ஏற்பட்டதாக பாகிஸ் தான் அறிவித்துள்ளது. இந்தக் கைதிகள் விடுவிப்பு இன்று இடம்பெறும் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.



ஆப்கானிஸ்தானில் அமெரிக்க வெடிபொருட்கள் அகற்றும் பிரிவினர் தமது பணியில் ஈடுபடுகின்றனர்.



காசாமுனைப்பகுதியில் பிரிட்டன், அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் தேசியக் கொடிகளை பலஸ்தீனர்கள் எரிக்கின்றனர்.



பிறேசிலியா வானில் மே.15இல் ஏற்பட்ட சந்திர கிரகணத்தின்போது சந்திரன் அரை வட்டத்தில் காட்சியளிக்கிறது.

## சீன அரசின் எச்சரிக்கை

சார்ஸ் நோயை வேண்டுமென்றே பரப்பினால் மரணதண்டனை உட்பட கடும் தண்டனை வழங்கப்படுமென சீனா எச்சரித்துள்ளது.

இந்த பயங்கரநோய் பரவி பெரும் எண்ணிக்கையில் மரணங்கள் நிகழ்வதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மணமகள் வெளிநடப்பு!

(புதுடில்லி)


வரதட்சணை கேட்கும் மாப்பிள்ளை வேண்டாம் என்று கூறிவிட்டு புதுமணப்பெண் ஒருவர் மணப்பந்தலைவிட்டு வெளியேறிய சம்பவம் இந்தியாவின் புதுடில்லியில் இடம்பெற்றுள்ளது.

எட்டுலட்சம் ரூபா வரதட்சணை கேட்ட யுகேந்திரசிங் என்ற மணமகனை வேண்டாம் என்று கூறிவிட்டு மணமகள் பந்தலைவிட்டு வெளியேறியுள்ளார்.

# மேற்கிந்தியத்தீவிற்கு வரலாற்று வெற்றி

சொந்த மண்ணில் அடுத்தடுத்து மூன்று டெஸ்ட் தோல்விகளைச் சந்தித்த லாறா தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு அன்டிக்குவா டெஸ்ட் வெற்றி ஓர் ஆறுதல் அளிக்கும் / திருப்பு முனை மிக்கதொன்றாக அமையும் எனில் மிகையாகாது.

அவுஸ்திரேலியாவுடன் அன்டிக்குவாவில் நடைபெற்ற நான்காவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று ஒரு சாதனையையும் ஏற்படுத்தியுள்ளது.


வெற்றியைக்கொடுத்த ஆடுகளத்தை முத்தமிடும் மேற்கிந்தியதீவுகள் அணியினர்.

இந்த டெஸ்ட் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் மிக்கதொன்றாக இப்போட்டி இருக்குமென்றே கிரிக்கெட் விமர்சகர்களால் கருதப்பட்டது.

ஏனெனில், அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்து வெளிநாட்டு டெஸ்ட் தொடர் ஒன்றில் அனைத்துப்போட்டிகளையும் வெற்றிகொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக தொடர்ச்சியாகப் பெறும் பத்தாவது வெற்றியாகவும் இப்போட்டி அமைய இருந்தமையும் ஒரு முக்கியமான காரணமாகும்.

அடுத்து அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ்வோவிற்கும் இந்த டெஸ்ட் போட்டியின் வெற்றி மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக இருந்தது.

ஏனெனில், அவருடைய கிரிக்கெட் வாழ்க்கை முடிவுறும் காலம் வந்துவிட்ட நிலையில் இவ்வெற்றியைப் பெற்றிருந்தால் அது அவருக்கு ஒரு சாதனையாக அமைந்திருக்கும். அதாவது டெஸ்ட் போட்டிகளில் அதிக வெற்றிகளைப் பெற்றுக்கொண்ட தலைவர் என்ற சாதனையைத்தனதாக்கிக் கொண்டிருக்க முடியும்.

அடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணியைப் பொறுத்தவரையில் தமது சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரின் அனைத்துப்போட்டிகளிலும் தோல்வியடைவதைத் தடுக்க வேண்டிய ஒரு கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த அதே வேளை, அவ்வணியால் இதனைச் சாதிக்க முடியுமா? என்ற கேள்வியும் பெரும்பாலான கிரிக்கெட் விமர்சகர்களால் எழுப்பப்பட்டிருந்தது.

இந்நிலையில்,போட்டியின் முதல் நாள் ஆட்டமே அவுஸ்திரேலிய அணிக்கு சவால் விடுவதாக லோசனின் பந்துவீச்சு அமைந்தது. இது கிரிக்கெட் விமர்சகர்களையும் வியப்பில் ஆழ்த்தியது எனலாம்.

ஏனெனில், முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளைப்போன்று முந்நூறு அல்லது முந்நூற்று ஐம்பது என்ற ஓட்ட எண்ணிக்கையை மூன்று அல்லது நான்கு விக்கெட்டுக்களை இழந்து அவுஸ்திரேலிய அணி பெறும் என்றே அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அதற்கு மாறாக அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து அவுஸ்திரேலிய அணி தனது முதல் இனிங்ஸில் வெறும் 240 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்தக் குறுகிய ஓட்ட எண்ணிக்கைக்குள் அவுஸ்திரேலிய அணியைக் கட்டுப்படுத்தியது லோசனின் பந்துவீச்சேயாகும். அவர் 78 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அடுத்து தங்கள் முதல் இனிங்சை ஆரம்பிக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் நாள் ஆட்ட நேரம் முடியும்போது இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதனை அடுத்து இரண்டாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்தியதீவுகள் அணியை அவுஸ்திரேலியப் பந்துவீச்சாளர்களும் ஓரளவு திணறடித்தனர் என்றே கூறலாம். இதன் விளைவாக அவுஸ்திரேலிய அணியின் முதல் இனிங்சின் ஓட்ட எண்ணிக்கையான 240ஐப் பெற்ற நிலையில் மேறகிந்தியத்தீவுகள் அணியும் தனது சகல விக்கெட்டுக்களையும் இழக்க வேண்டியதாகியது.

இந்த நிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் விக்கெட் இழப்பின்றி 171 ஓட்டங்களைப்பெற்று வலுவான நிலையில் இருந்தது.

அடுத்து மூன்றாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி அதன் இரண்டாவது இனிங்ஸ் நிறைவில் ஒரு வலுவான/கடினமான ஓட்ட என்ணிக்கை இலக்கை மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு நிர்ணயித்தது. அதாவது 418 ஓட்டங்களைத் தனது இரண்டாவது இனிங்சில் பெற்றுக்கொண்டது. இதில் மத்தியு கேடன் 177 ஓட்டங்களையும் லாங்கர் 116 ஓட்டங்களையும் பெற்று அணியின் நிலைக்கு வலுச்சேர்த்தனர்.

இந்த நிலையில் நான்காவது டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணிதான் வெற்றிபெறும் என்று பெரும்பாலானவர்களால் கருதப்பட்டதுண்டு. ஏனெனில் இதற்கு முக்கியமான காரணங்கள் இருந்தன. அவைகளில் மேற்கிந்தியத் தீவுகளின் கடந்த மூன்று டெஸ்ட் போட்டிகளின் தோல்விகளும். அவுஸ்திரேலிய அணியில் இருக்கும் அனுபவம் வாய்ந்த பந்துவீச்சாளர்களின் நம்பிக்கையும் ஒரு காரணமாக இருந்ததுடன் நான்காவது இனிங்ஸ் ஒன்றில் இவ் ஓட்ட எண்ணிக்கையைக் கடப்பதென்பது கிரிக்கெட் வரலாற்றில் சாதனைக் குரியதொன்றாகவும் கொள்ளத்தக்கதாய் இருந்தது. ஆகையினால், மேற்கிந்தியர்களால் இதனை சாதிக்க முடியுமா என்ற கேள்வி பொதுவாகவே இருந்தது. அது மட்டுமல்ல, கடந்த மூன்று டெஸ்ட்களிலும் மேற்கிந்தியர்கள் இத்தகைய சாதனைக்குரியவர்களாகத் தம்மை வெளிக்காட்டவும் இல்லை.


மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் விக்கெட் இழப்பின்றி மேற்கிந்தியத் தீவுகள் 47 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நான்காம் நாள் ஆட்டம் ஆரம்பித்த வேளை, மூன்று விக்கெட்டுக்களை விரைவாக இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், லாறாவும், சர்வானும் இணைந்து அணியை ஸ்திர நிலைக்குக் கொண்டு சென்றனர். அவ்வேளை அணியின் தலைவர் லாறா 60 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த சந்திரபோல் ஆட்டத்தின் போக்கையே மாற்றியமைக்கும் அளவிற்கு தன்னுடைய ஆட்டத்தை ஆரம்பித்தார். இந்த நிலையில் நான்காம் நாள் ஆட்ட முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 371 ஓட்டங்களைப் பெற்று வெற்றியின் விளிம்பில் நின்றது.

ஐந்தாம் நாள் ஆட்டம் ஆரம்பித்த வேளை மிகவும் முக்கியமான விக்கெட் எனக் கருதப்பட்ட சந்திரபோலின் விக் கெட்டை மேற்கிந்தியத் தீவுகள் இழந் தமை ஆட்டத்தை ஒரு பரபரப்பான நிலைக்குக் கொண்டு சென்றது. ஆயினும் எட்டாவது விக்கெட் இணை நின்று நிதானித்து விளையாடி மேற்கிந்திய அணியை வரலாற்று முக்கியத்துவம் மிக வெற்றி பெற வழி வகுத்தனர். இதில் சர்வானும் சந்திரபோலும் சதத்தைப் பூர்த்தி செய்தனர்.

இந்த நிலையில் இருபத்தி ஏழு வருடங்களின் பின் நான்காவது இனிங்ஸ் ஒன்றில் அதிகூடிய ஓட்ட இலக்கை அடைந்த அணி என்ற பெருமை தனதாக்கிக் கொண்டுள்ள லாறா தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு இது புதிய உத்வேகத்தை அளிக்கும் ஒன்றாக மாறியுள்ளது.

அத்துடன் அடுத்து நடைபெறவுள்ள இரு அணிகளுக்குமிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு சர்வதேசப்போட்டி பெரும் சவால்கள் நிறைந்ததொன்றாகவும், கடும் பரபரப்பை ஏற்படுத்தக் கூடியதொன்றாகவும் அமையும் எனில் அது மிகையாகாது. □□

**பூ.சுபானந்த்**


-ஜெயந்திரன்

# ஊதியம் பெறுவதில் பெக்காம் முன்னணியில்

உலகில் ஆகக் கூடுதலான ஊதியம் பெறும் கால்பந்தாட்ட வீரர் எனும் பெருமையை இங்கிலாந்து அணியின் தலைவரும் மன்செஸ்டர் யுனைட்டட் அணி வீரருமான டேவிட் பெக்காம் பெறுகின்றார்.

அவரது வருடாந்த ஊதியம் சுமார் 15மில்லியன் யூரோ (170 கோடி ரூபா) என பிரெஞ்சு கால்பந்தாட்ட சஞ்சிகை ஒன்று நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இதுவரை பிரான்ஸ் வீரரான லினடின் ஸிடான் அதிக ஊதியம் பெறும் வீரராக விளங்கினார். தற்போது ஸிடான் 14 மில்லியன் யூரோக்களுடன் இரண்டாம் இடத்திலும் மற்றொரு வரரான பிரேசிலின் றொனால்டோ 11.7 மில்லியன் யூரோக்களுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளார். உதைபந்தாட்ட உலகில் கடின உழைப்பாளிகளில் ஒருவராகத்திகழும் பெக்காம் உலகக் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணியைச் சிறப்பாக வழிநடத்தி இறுதிப்போட்டிவரை கொண்டு செல்வார் என எதிர்பார்க்கப்பட்டவர். ஆனால் தற்போதைய உலக சம்பியனான பிரேசில் அணியிடம் 1:0 என்ற கோல் எண்ணிக்கையில் அதிர்ச்சித் தோல்வி அடைந்து கண்ணீருடன் வெளியேறியது.



பல முன்னணி இளம் வீரர்களை கொண்டுள்ள இங்கிலாந்து அணியை 2006ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிவரை வழிநடத்திச் செல்வார் என எதிர்பார்க்கப்படும் பெக்காம் உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய நாடாக இங்கிலாந்தை மாற்றுவார் என்பதே ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பாகும். பந்து கடத்துவதிலும் நீண்ட நேரம் விளையாடுவதிலும் பிரிக்கிக் எடுப்பதிலும் பெக்காம் வல்லவராகத் திகழ்கின்றார்.

# குங்ஃபூ எங்கே தோன்றியது? எங்கே வளர்ந்தது?

உலக அரங்கில் விளையாட்டுக்கள் தொழில்நுட்ப அறிவுடன் நவீனத்துவம் பெற்றுவிட்ட இன்றைய நாளில் உடலையும் உள்ளத்தையும் உறுதியாக்கும் பல அருங்கலைகள் ஆதரிப்பாரின்றி மங்கி மறைந்து விடும் நிலையில் உள்ளன. இவற்றில் சீனாவில் தோன்றிய குங்.ஃ.பூ கலை முக்கியத்துவம் பெறுகின்றது.

இக்கலை எதிரியை எதிர்ப்பதற்கும் தன்னைக்காத்துக்கொள்வதற்கும் உபயோகப்படுகின்றது. அத்துடன் ஆயுதத்தை பயன்படுத்தாது எதிரி தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்ற துணிவை ஏற்படுத்திக்கொள்ள முடியாதபடி அவனைத் திணறடிக்கும் தந்திரங்கள் இந்தக் கலையில் உள்ளது.

இப்படிப்பட்ட அருங்கலையின் தோற்றுவாய்பற்றி அறிந்துகொள்வோம்.

இந்தியாவில் இருந்து கி.மு. 3200இல் 'போதிதர்மர்' என்று அழைக்கப்பட்ட 'டாமோ' **(Tamo)** என்ற புத்தமதத்துறவி சீனாவுக்கு பயணம் செய்தார். அங்கே 'சாவோயின்' கோயிலில் முதலில் நோய்வாய்ப்பட்ட புத்த பிட்சுக்களுக்கு 'ஜேன் மெடிடேஷன் **(Zenmeditation)** என்ற தியான முறையைப் போதித்தார்.

பின்னர் வழிப்போக்கர்களாலும் கொள்ளையர்களாலும் தாக்கப்பட்ட சில புத்த பிட்சுக்கள் இறந்துபோனதை கேள்விப்பட்ட போதிதர்மர் இனி இப்படியான மரணங்கள் ஏற்படலாகாது என்று கருதி 18 தற்காப்புப் பயிற்சிகளைக் கற்பித்தார். இதனை "எகிகிங்க்யோ" **(Ekikinkyo)** என்று அழைத்தனர். பின்னர் புத்தமத யோக முறைகளும் இத்துடன் இணைக்கப்பட்டன. இந்தப் பயிற்சிகள் அனைத்தும் இந்திய "ஹட யோக" **(Hatayoga)** முறையைப் போன்று தோன்றினாலும் முற்றும் மாறுபட்ட பயிற்சிகள் என்று சீன மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இவர் போதித்த பயிற்சி முறைகள் உள் உறுப்புகளையும் வெளி உறுப்புகளையும், உள்ளத்தையும் உறுதிப்படுத்தின. அதே சமயத்தில் இதே பயிற்சிகள் எதிராளிகளிடமிருந்து தற்காத்துக்கொள்ளவும் பயன்பட்டன. இவரது காலத்திலேயே சீனா முழுவதிலும் உள்ள புத்தமதக் கோயில்களான சாருவாலின் மடங்களில் இந்த மாதிரியான பயிற்சிகள் போதிக்கப்பட்டன. இவை அப்போது "மாங்க் பொக்சிங்' **(Mank Boxing)** என்று அழைக்கப்பட்டது. பின்பே குங்.ஃ.பூ என்ற பெயர் ஏற்பட்டது.

போதிதர்மரின் உயர்ந்த தந்திரங்கள் அவரது காலத்திற்குப் பின் குரு சீடப் பரம்பரையாகக் காக்கப்பட்டு வந்தன. அவ்வப் போது நன்கு தேர்ச்சிபெற்ற சிலர் தத்தமக்கு தோன்றிய சில தந்திரங்களைப் போதித்தனர். டிராகன்,பாம்பு,புலி, குரங்கு, கொக்கு, பட்டாம் பூச்சி போன்ற பிராணிகளின் அசைவுகளையும் இணைத்து மேலும் மேலும் இந்தக் கலையைச் சிறப்பாக்கினர். சில கடினமுறைகளும் சில மென்மையான முறைகளும் பின்னர் தோன்றின.

கி.மு.2674இல் மஞ்சள் சக்கரவர்த்தி என்ற ஹுவாங்டி **(Huangti)** என்ற இளம் பேரரசன் போர்க்களத்தில் தன் எதிரியை குங்.ஃ.பூ தந்திரங்கள் மூலம் வெற்றிகண்டதாக சீன நாட்டுப் பதிவேட்டுக் குறிப்புக்கள் கூறுகின்றன.

பல நூறு ஆண்டுகளுக்குப் பின் வந்த சுயேற்யுவான் என்ற இளம் வாலிபன் தானே குங்.ஃ.பூ கலையில் பல புதிய அசைவுகளைக் கண்டு பிடித்து போதித்து வந்தான். மேலும் போதிதர்மரின் குங்.ஃ.பூ பலவிதமாக பிளவுபடுவதை விரும்பாத சீனா முழுவதும் சுற்றிப் பல துறவிகளை ஒன்று சேர்த்து போதிதர்மரின் பழைய 18 பயிற்சிகளுடன் தம் பயிற்சி முறைகள் 72ஐ இணைத்து மேலும் சில பயிற்சிகளைச் சேர்த்து மொத்தம் 170 பயிற்சிகளாக மாற்றினான்.

காலம் மாற மாற மீண்டும் பலபிரிவுகளாகப்பிரிந்து வளரலாயிற்று. இந்த உன்னதக் கலை கடைசியாக போதிதர்மரின் 18 பயிற்சிகள் உள்ளத்தை உறுதியாக்கவும் உள்ளுறுப்புக்களை உறுதிப்படுத்தவும் ஆயுள் நீடிக்கவும் பயன்பட்டன. இது மென்மை அல்லது உள்பயிற்சிகள் என்றே அழைக்கப்பட்டன. மற்றைய பயிற்சிகள் கடினம் அல்லது வன்மை அல்லது வெளிப்பயிற்சிகள் என்று அழைக்கப்பட்டன.

டாமோவின் மென்மைக்கலையில் தத்துவம், மருத்துவம், இலக்கியம், உடலியல், உளவியல் எல்லாம் இணைக்கப்பட்டன. வன்மைக்கலையில் பல்வேறு ஆயுதப் பயிற்சிகள் இணைக்கப்பட்டன.

ஆதியிலிருந்தே குங்.ஃ.பூ வளர்ந்துவரும் காலத்தில் டாவோயிஸம் என்ற ஒரு தத்துவமும் வளர்ந்து வந்தது. பின்னர் குங்.ஃ.பூவும் டாவோயிசும் சேர்ந்து புதிய சில வீரக்கலைகள் தோன்றின. குங்.ஃ.பூ எப்படி வளர்ந்தபோதும் சீன அரசின் மதிப்புக்கும் ஊக்கத்திற்கும் உட்பட்டு உலகரீதியில் ஓர் உயர்கலையாக மதிப்புடன் போற்றப்படுகின்றது உண்மை.


# வீதியொழுங்கு விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது



04. கைச் சைகைகள் கொடுக்கும் நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளிலும் இருந்து திரும்பும் போது இரு கைகளையும் கைப்பிடிச்சட்டத்தில் வைத்திருங்கள். அத்துடன் ஏனைய வாகனங்களின் வேகத் தைக் கருத்திற்கொண்டு தங்கள் வாகனத்தைச் செலுத்துவதில் உறுதியாய் இருங்கள். மிதிவண்டியின் முறையான கட்டுப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதான எப்பொருளையும் கொண்டு செல்லாதீர்கள்.

05. மிதிவண்டி ஓடும் பொழுது நகர்ந்து கொண்டிருக்கும் இன்னோர் வாகனத தை அல்லது ஓடிக்கொண்டிருக்கும் மற்றுமோர் மிதிவண்டி ஓட்டுபவரை பிடிக்கா தீர்கள்.

06. போக்குவரத்திற்கு இடையே புகுந்து ஓடாதீர்கள். வளைவு நெளிவான விதத்தில் ஓடாதீர்கள்.



வீதியொழுங்கு விதிமுறைகளை நடைமுறைப் படுத்து வதில் சகல வீதிப்பாவனையளர்களினதும் ஒத்துழைப்பு வேண்டப்படுவதுடன் இவ்விதிகளைக் கடைப்பிடித்தல் தங் கள் நலன் கருதியே என்பதனை உணர்ந்து கொள்ளுவ தும் முக்கியமானதாகும். இவ்வாறு தமிழீழ காவல்துறை யின் வாகனப்போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த காலப்பகுதிகளில் வீதிவிபத்து அதிகரித்துக் காணப்படுகின்றது. பெரும்பான்மையான வீதிவிபத்துக்கள் சந்திகளில் அல்லது ஊடறுக்கும் வீதிகளிலும், வீதிகளில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களின் முன்பாகவோ அல்லது- பின்புறமாகவோ, வீதியைக் கடக்க முற்படும் பேரதும் வாக னங்களை முந்திச் செல்ல முற்படும்போதும், துவிச்சக்கர வண்டிகளைப் பக்கம் பக்கமாக சமாந்தரமாக ஓட்டிச்

## உங்கள் நலன்கருதியே என்பதை உணருங்கள்!

செல்லும்போதும், அதிக வேகமாக வாகனங்களைச் செலுத்தும் போதும் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக நடைபெற்றுள்ள வீதிவிபத்துக்களில் அதிகப் படியான துவிச்சக்கரவண்டி ஓட்டிகளே விபத்தில் இறந்தவர் களாகவும், காயப்பட்டவர்களாகவும், தங்களது துவிச்சக்கர வண்டிகளுக்குச் சேதம் ஏற்படுத்திக் கொண்டவர்களாகவும் உள்ளார்கள்.

இந்த வகையில் துவிச்சக்கர வண்டிகளைப் பொதுவீதி யில் ஓட்டிச் செல்பவர்கள் தாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை அறிந்து கொண்டவர்களாக இருத்தல் மிக அவசியமாகும்.

வீதிகளில் விபத்துக்கள் இன்றிப் பாதுகாப்பாக தங்கள் துவிச்சக்கர வண்டிகளை ஓட்டிச் செல்வதற்கான வீதி யொழுங்குவிதிமுறைகளை ஒருமுறை தங்களிற்குத் தெரியப் படுத்துவதில் தேவை அதிகரித்துள்ளது.

மிதிவண்டி ஓட்டிகள் வீதியில் தங்கள் மிதிவண்டிகளை ஓட்டிச் செல்லும் போது கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறை கள் கீழே தரப்படுகின்றன. பின்வரும் விதி முறைகளை அறிந்துகொண்டு அதனைக் கடைப் பிடிப்பதில் கவனம் செலுத்துங்கள். சட்டம் தெரியாது என நாம் எந்தக் குற்றத்தில் இருந் தும் விடுபட முடியாது என்பதை கருத்திற்கொள்ளுங்கள்.

01. வீதியில் மிதிவண்டி ஓடுவ தற்கு தாங்கள் தகுதியுடையவரா என்பதனை உறுதிப்படுத்துங்கள். தங்கள் மிதிவண்டி பொறிமுறை சீராக உள்ளதா என்பதையும் இருக் கையும், கைபிடிச் சட்டமும் உங் களிற்கேற்ற உயரத்தில் உள்ளதா என்பதனையும் சரிபார்த்துக் கொள் ளுங்கள்.

02. இரவில் தங்கள் மிதிவண்டி முன்பக்கத்தில் வெள்ளை விளக்கையும் பின்பக்க சிவப்பு விளக்கினையும் அல்லது சிவப்பு தெறி கருவியையும் கொண்டிருத்தல் வேண்டும். பின் பக்க சக்கர மட்பட்டை வெள்ளை நிறவர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும். இருள் சூழத் தொடங்கியவுடனேயே விளக்கு களை ஒளியூட்டுங்கள் இரவில் மென்னிற ஆடை அணிவ தன் மூலம் அணுகும் வாகனங்கள் தங்களை எளிதாகபார்க கக் கூடியதாக இருக்கும்.

03. மிதிவண்டிக்கு ஒழுங்கை வழங்கப்பட்டிருப்பின் அதனை உபயோகியுங்கள். ஆனால் மிதிவண்டி ஒழுங்கை இல்லா தவிடத்து இடது நடைபாதைக்கு அருகாமையாகச் செலுத் துங்கள். எப்பொழுதும் ஒருவர் பின் ஒருவராகவே ஓட்டிச் செல்லுங்கள். ஒருபோதும் இரண்டிற்கு அல்லது அதற்கு அதிக மாக பக்கம் பக்கமாக ஓட்டிச் செல்லாதீர்கள்.

07. நிறுத்தப்பட்டிருக்கும் வாகனமொன்றினைக் கடந்து செல்லும்போது அதன் பிரயா ணிகள் கவனயீனமாக வாகனத்தின் கதவுகளைத் திறப்பார்கள். அத்துடன் தங் களையும் நிறுத்தப்பட்ட வாகனத்தையும் முந்திக்கொண்டு ஏனைய வாகனங்கள் கூடிய வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் கவனமாய் இருங்கள்.

08. சிறுவீதியொன்றில் இருந்து பிரதான வீதிக்குள் புகும் பொழுது மிகக் கவனமாய் இருங்கள். பிரதான வீதிக்குள் புக முன்னர் எப்பொழுதும் வாகனத்தை நிறுத்துங்கள் பிர தான வீதியில் உள்ள வாகனங்களிற்கே செல்லும் உரிமை யுண்டு.

09. ஒரு வழிப்பாதைகளில் அல்லது சுற்றுவட்டத்தெருவில் போக்குவரத்துத் திசைகளிற்கு எதிராக செலுத்தல் ஆகாது.

## தண்ணீரூற்றில் வீடொன்று விசமிகளால் தீக்கிரை!

தண்ணீரூற்று குமாரபுரம் பகுதி யில் கடந்த ஞாயிறன்று இரவு இனந் தெரியாத விசமிகளால் வீடு ஒன்று தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது.

குமாரபுரத்தைச் சேர்ந்த பொ.நல் லையா என்பவரின் வீடு முற்றாக எரிந்துள்ளது. 40 ஆயிரம் ரூபா சொத் தழிவு ஏற்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக முள்ளி யவளை காவல்துறையில் முறையீடு செய்யப்பட்டதையடுத்து காவல்துறையினரால் மேற்படி சம்பவத்துக்குரிய சந்தேக நபர்கள் தொடர்பான இரகசிய புலன் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக தெரியவருகிறது. (ஆ)

## மலையகத்தின் பல பகுதிகளில் மண்சரிவு; பலர் வீடிழப்பு; போக்குவரத்தும் தடை!

(கண்டி)

மலையகத்தில் இடம்பெற்று வரும் பரவலான மண் சரிவுகளினால் பல வீடுகள் சேதமடைந் துள்ளதுடன் போக்குவரத்து வீதிகளும் மூடப்பட் டுள்ளன.இதனால் குறுந்தூர மற்றும் நீண்டதூர போக்கு வரத்துக்கள் தடைப்பட்டிருப்பதுடன் மக்கள் இடம் பெயர்ந்து பொது இடங்களில் தஞ்சம் புகுந் துள்ளனர்.

மலையகம் வட்டவளை ஆடைத்தொழிற்சாலைக்க ருகே ஏற்பட்ட மண்சரிவினால் மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.நேற்று முன்தினம் இரவு இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த மண்சரிவினால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.சேதமடைந்த வீடுகளில் உள்ளோரும் ஏனையோரும் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கினிகத் தென பிரதேச செயலர் காரியாலயத்திற்கு அருகில் ஏற்பட்ட மண்சரிவினால் ஹற்றன் கினிகத்தென பிரதான வீதி மண்களால் மூடப்பட்டு தடைப்பட்டுள்ளது.









கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கினால் கடந்த மாத இறுதியில் சர்வதேச விதிகளுக்கு அமைவாக நடத்தப்பட்ட சிங்கராஜா ஜெயப்பிரகாஸ் ஞாபகார்த்த கேடயத்திற்காக 15,19 வயதுப்பிரிவைச் சேர்ந்த பாடசாலை அணிகளுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தொழில்நுட்ப உபசெயலாளர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை உரையாற்றுவதையும், 15 வயதுப் பிரிவில் சம்பியனாகிய கிளிநொச்சி ம.வி அணித்தலைவருக்கு தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் க. இன்பனும் , 19 வயதில் சம்பியனான உருத்திரபுரம் ம.வி அணித்தலைவருக்கு கிளி. வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ம. பத்மநாதனும் பரிசில் வழங்குவதை படங்களில் காணலாம்.

## பேசித்தீர்க்க வலியுறுத்து

சனாதிபதியும் பிரதமரும் மட்டுமே லொத்தர் சபை விவகாரத்தை பேசித்தீர்க்க முடியும் என சனாதிபதி சட்டத்தரணி டெஸ்மன் பர்னாந்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை அச் சிட தடைவிதித்துள்ள மக்கள் தொடர்பாடல் அமைச சர் இதற்கு நீதிபதியின் உத்தரவை எதிர்பார்த் திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீதிபதியின் உத் தரவு சனாதிபதிக்குக் கிடைத்திருப்பினும் அதை ஏற்க சனாதிபதி அலுவலகம் மறுத்திருப்பதாக வும் தெரிவிக்கப்படுகிறது." இதனால் ஏற்படும் மோத லைத் தடுக்க அனைவரும் ஒத்துழைக்க முன் வருமாறு அமைச்சர் கூறியுள்ளார்.

# சனாதிபதி-பிரதமரிடையே இணக்கமின்றேல் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரும்!

## - வர்த்தக சமூகம் எச்சரிக்கை

(கொழும்பு)

**சனாதிபதி அபிவிருத்தி லொத்தர் சபையை தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டமை தொடர்பாக பிரதமருக்கும் சனாதிபதிக்கும் இடையில் இருந்து வரும் பிணக்கிற்குத் தீர்வுகாண இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று வர்த்தக சமூகம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே இணக்கப்பாடு ஒன்று ஏற்படாத பட்சத்தில் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் என்று ஐக்கிய வர்த்தக மாநாட்டின் தலைவர் நிகால் அபயசேகர தெரிவித்துள்ளார்.

இருவருக்கும் இடையே இணக்கப்பாடு ஏற்பட வேண்டியதன் அவசியத்தை அவர்களுக்கு புரிய வைப்பதற்கு வர்த்தக அமைப்பு பேச்சுவார்த்தைகளை நடத்த அனுமதி தரவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோளுக்கு இவர்களிடம் இருந்து இதுவரை பதில் கிடைக்கவில்லை.

நாடு இன்று எதிர்நோக்கும் மிக மோசமான பிரச்சினை இனப்பிரச்சினையாகும். ஆனால் தற்போதைய அரசியல் நெருக்கடி இந்தப் பிரச்சினையை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

இரண்டு தலைவர்களும் பேச்சுவார்த்தை மூலம் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரத் தவறினால் நாடு பார தூரமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அம்பாறை இந்து மாநாடு புதிய திகதிகள் அறிவிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட இந்து மாநாடு இம்மாதம் 31ஆம் திகதியும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே இம்மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் இம்மாநாடு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இம்மாதம் 31ஆம் திகதி காலையில் காரைதீவு சிறி கண்ணகி அம்மன் ஆலயத்தில் விசேட பூசையும் தொடர்ந்து காரைதீவு விபுலானந்தர் மணி மண்டபத்தில் மாநாடும் இடம்பெறவுள்ளது.

அன்று மாலை கல்முனைப் பாடசாலையில் இந்து மாநாட்டின் ஆய்வரங்கு இடம்பெறவுள்ளது.

முதலாம் திகதி காலை அக்கரைப்பற்று சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசையும் தொடர்ந்து ஆலையடி வேம்பு கலாச்சார நிலையத்தில் மாநாடும் இடம்பெறும்.

மாலையில் தம்புறுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் இந்து மாநாட்டின் பிரதான விழா இடம்பெறும்.

## பேருந்து தரிப்பு நிலையத்தில் பெரும் சுகாதாரக் கேடு!

### -பயணிகள் விசனம்

(முள்ளியவளை)

புதுக்குடியிருப்பு பேருந்து தரிப்பு நிலைய மலசலகூடம் சுகாதார சீர்கேடாக பயணிகள் பயன்படுத்த முடியாத நிலையில் தொட்டிகளில் தண்ணீர் இன்றிக் காணப்படுவதால் பேருந்து தரிப்பு நிலையத்தில் வெளி இடங்களில் இருந்து வரும் பயணிகள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதுடன் அவசரமான நிலையில் மலசலகூடங்களை தேடி அயல் வீடுகளிற்குச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

மலசல கூடத்தில் உள்ள தொட்டியில் தண்ணீர் இல்லாமையினால் சில பயணிகள் அவசரத்தில் மலசலகூடத்தில் மலம் கழித்து விட்டு அவதிப்படுகின்றனர். அவ்விடத்தில் கூடுதலான இலையான்கள் உள்ளன.

இதேவேளை இவ் மலசல கூடத்திலிருந்து சுமார் 75 மீற்றரில் உணவு விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றது. அவ் இலையான்கள் இவ் உணவு நிலையங்களிலும் பரவும் போது தொற்று நோய்கள் பரவும் நிலை உருவாகும். இப் பேருந்து தரிப்பு நிலைய வசதிகள் இன்றிப் பயணிகள் பல வாரங்களாகப் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகப் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஆ)

## மன்னார் மாவட்ட விவசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய்ய நிதி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து நெல்லினை கொள்வனவு செய்வதற்காக அரசாங்கம் இருபது மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

அரசாங்க அதிபரூடாக இந்த நிதி பலநோக்குக் கூட்டுறவுச் சங் கங்களுக்கு நெல் கொள்வனவுக்காக வழங்கப்பட்டுள்ளது. (மி)

## அனுருத்தவின் வழக்கு விசாரணைகளால் தமிழ்க் கைதிகளது விசாரணை இழுத்தடிப்பு

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டுள்ள அனுருத்த ரத்வத்த மீதான வழக்கினால் களுத்துறை சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் தாமதமடைந்து வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை விசாரித்து வரும் வெலிக்கடை விசேட நீதிமன்ற நீதிபதிகள் அனுருத்தரத்வத்தவின் வழக்கு விசாரணைக்காகவும் அழைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கு விசாரணைகளை விசேட நீதிமன்ற நீதிபதிகள் மேற்கொள்வதால் தங்களுடைய வழக்கு விசாரணைகள் தாமதமடைந்து வருவதைச் சுட்டிக் காட்டும் தமிழ் அரசியல் கைதிகள் கடும் விசனமடைந்துள்ளதுடன் சில கைதிகள் உண்ணாவிரதப் போராட் டத்தில் ஈடுபட்டும் வருகின்றனர்.

அத்துடன், எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள நீதிமன்ற விசாரணைகளை தாங்கள் பகிஸ்கரிக்கப்போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

## படையினர் நிலைகொண்டுள்ள இடங்கள் பற்றி விபரம் திரட்டல்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் படையினர் நிலை கொண்டுள்ள பொதுக் கட்டடங்கள் மற்றும் பொது மக்களின் வீடுகள் தொடர்பான விபரங்களை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ளது.

இதற்காகப் படை அதிகாரி ஒருவரை சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு நியமித்துள்ளது.

பொது மக்கள் நேரடியாகவும் தபால் மூலமாகவும் விபரங்களைத் தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்களப் பாடசாலைகளிலும் தமிழ் மொழித் தினப் போட்டிகள்!

### – கல்வியமைச்சு கூறுகிறது

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தமிழ் மொழித் தினப் போட்டிகளை நடத்த கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்தப் போட்டிகளை 950 அரச பாடசாலைகளிலும் நடாத்தவிருப்பதாகவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்க ஊக்குவிப்பதற்காகவே இந்த முயற்சி முன்னெடுக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

## அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தை புனரமைப்பது குறித்து கலந்துரையாடல்

(முல்லை)

அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம் புனரமைப்பது தொடர் பாக கடந்த செவ்வாயன்று பி.ப. 4.30 மணிக்கு கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தலைமையில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதில் அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம் புனரமைப்பு தொடர் பாக மக்கள் ஆற்ற வேண்டிய பணி பற்றி தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் விரிவான விளக்கம் அளித்தார்.

துயிலும் இல்லம் தற்போது உள்ள நிலை பற்றியும் இதை எவ்வாறு புனரமைப்பு செய்யலாம் என்பது பற்றியும் விரிவாக விளங்க வைத்தார். இக்கலந்துரையாடலில் கடற்புலிகளின் மகளிர் தளபதி ஜெறோமி, தமிழீழ மாவீரர் பணிமனை மகளிர் பொறுப்பாளர் அர்ச்சனா, கடற்புலிகளின் முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அமலி, கடற்புலிகளின் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன், அளம்பில் முல்லை பிரதேசப் பொறுப்பாளர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (20)

## மாதர் சங்க ஒன்றுகூடல்

கணுக்கேணி கிழக்கு, மேற்குக் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களின் மாதர்சங்க ஒன்றுகூடல் கடந்த புதனன்று பி.பகல் 4.00 மணிக்கு கணுக்கேணி பொது மண்டபத்தில் முள்ளியவளைப் பிரதேச பெண்கள் மேம்பாட்டு குழு உபதலைவியும், கணுக்கேணி மாதர்சங்கத் தலைவியுமான சரஸ்வதி தலைமையில் நடை பெற்றுள்ளது.

சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பாகவும் மாதர் சங்கங்களின் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ் நிலவு கருத்துரை வழங்கினார். (ஆ)

## அரச அதிபரின் முயற்சியால் பாடசாலை புனரமைப்புக்கு நிதி!

நிக்கொட் நிறுவனத்தினதும் ஜேர்மன் கல்வி அபிவிருத்தி நிறுவனத்தினதும் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் புனரமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தினர் கடற்காற்று இராணுவ நடவடிக்கை மூலம் 1990ஆம் ஆண்டு முல்லைத்தீவு நகரை முற்றாக ஆக்கிரமித்த போது முல்லைத்தீவு மகாவித்தியாலயமும் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டு அழிவுக்குள்ளாகியுள்ளது!

கட்டட வசதியோ தளபாட வசதியோ அற்ற நிலையில் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்வி கற்று வரும் மாணவர்களின் அவலத்தை கருத்தில் கொண்டு முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் கடும் முயற்சியினால் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் 9 மில்லியன் ரூபாவும் ஜேர்மன் கல்வி அபிவிருத்தி நிறுவனத்திடம் 3.3 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந் நிதிக்கான புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளது என முல்லை மகாவித்தியாலய அதிபர் ம.அன்ரனி ஜெகநாதன் தெரிவித்தார். (ஆ)

## இருக்கை கொடுத்து எழுந்து நின்றவர் பணத்தை இழந்தார்

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறையிலிருந்து தாளையடி வந்து கிளிநொச்சி செல்லும் பேருந்தில் கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு தனது இருக்கையைக் கொடுத்துவிட்டு எழுந்து நின்ற இளைஞர் ஒருவர் தனது பணத்தை இழந்தார். இந்தச் சம்பவம் கடந்த புதனன்று நடந்தது.

சனநெருக்கடியில் அவதிப்பட்ட ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு தனது இருக்கையைக் கொடுத்து விட்டு பின்னால் சென்று எழுந்து நின்ற மேற்படி இளைஞனின் பொக்கற்றிலிருந்து 400 ரூபா பணம் திருடப்பட்டது.

இந்த இளைஞன் புதுக்குடியிருப்பு செல்ல பணம் இல்லாது திண்டாடியதைக் காண முடிந்தது. (11)

## மதுபோதையில் வாகனம் செலுத்தினால் நடவடிக்கை

(முள்ளியவளை)

கேப்பாபிலவு புதுக்குடியிருப்பு வீதியில் அமைந்துள்ள காவல்துறை தடைமுகாம் பகுதியில் வைத்து மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை தடுத்து குற்றப்பணம் அறவிடப்பட்டு வருவதுடன் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அப்பகுதி தடைமுகாம் பொறுப்பதிகாரி விவேக் தெரிவித்துள்ளார்.

மதுபோதையில் வாகனங்களை ஓட்டிச்செல்வதால் வீதி ஒழுங்குகள் மீறப்பட்டு விபத்துக்கள் நிகழ்ந்து வருகின்றன. விபத்துக்களைத் தடுக்கும் முகமாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதையடுத்து விபத்துக்கள் குறைக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஆ)

## சிந்தனைக்கு

நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக் கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்றுதிரண்டு நின்றால், எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ, அழிக்கவோ முடியாது .

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 18-05-2003

## வரலாற்றை மறந்ததினால்

" நீங்கள் ஒருவரை வா என்று அழைத்துவிட்டு அவரை நோகடிக்கின்றீர்கள். இலங்கை அரசியல் போக்கு இதுதான் என்றால், இலங்கையின் சமாதான முயற்சிகளில் இனிப் பங்களிப்புச் செய்வதை நான் மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டியது தான். இனி வேறு வழியில்லை" என இந்தியாவின் முன்னாள் துணை இராணுவத் தளபதியும் இலங்கையில் உயர் பாதுகாப்பு வலயம் மீளமைப்பது தொடர்பாக அரசினால் ஆலோசனைக்கு அழைக்கப்பட்டவருமான லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியார் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

சிறிலங்கா அரசியல்வாதிகளின் விமர்சனங்களினாலும்,தென்னிலங்கையில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளின் குற்றச்சாட்டுக்களினாலும் லெப்.ஜெனரல் நம்பியார் மிகவும் வெறுத்துப் போயுள்ளார். இக்குற்றச்சாட்டுக்கள், தான் பெரிதாக மதிக்கும் தனது சுயகௌரவத்தைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளதாக அவர் கவலைகொண்டுள்ளார். அவ்வாறு இல்லாதுவிட்டால், அவர் தனது 'பங்களிப்பை' மீள் பரிசீலனை செய்யும் நிலைக்குச் சென்றிருக்க மாட்டார்.

ஆனால், சிறிலங்கா அரசியலில் இது புதியதொன்றல்ல. இதனை சதீஸ் நம்பியார் புரிந்து கொள்ளத் தவறியமையே அவரது தவறாகும். அத்தோடு இதனைப் புரிந்து கொள்ள அவர் பெரிதாக ஆராய்வோ அன்றி அவதானிப்போ செய்ய வேண்டிய தேவை கூட இல்லை. ஏனெனில், அவரது நாடே இத்தகையதொரு பாடத்தை சிறிலங்காவிடம் ஏற்கனவே கற்றுக் கொண்டிருந்தது. இந்திய இராணுவத்தை வரவழைத்துவிட்டுப் பின்னர் அவர்களை ஆக்கிரமிப்பு இராணுவம் எனக் கூறி வெளியேறுமாறு கோரியவர்கள் சிறிலங்கா ஆட்சியாளர்கள் ஆகும்.

தமிழ் மக்களும், விடுதலைப்புலிகளும் விரும்பினார்களோ இல்லையோ இலங்கை-இந்திய சமாதான உடன்பாட்டின் மூலம் இந்திய இராணுவம் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு வழி சமைத்தவர்கள் சிங்கள ஆட்சியாளர்களே. குறிப்பாக அன்றைய சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவே ஆகும்.

ஆனால், இந்திய இராணுவம் இலங்கைக்குள் பிரசன்னமாக இருந்ததில் இருந்தே அதற்கு எதிர்ப்பும், அதன் மீதான வெறுப்பும் வெளிப்படுத்தப்பட்டே வந்தது. ஆனால், விடுதலைப்புலிகளுக்கும்-இந்திய இராணுவத்திற்கும் இடையில் மோதல்கள் ஆரம்பித்த போது சிங்களவர் தரப்பில் ஓரளவு இந்திய எதிர்ப்புக் குறையத் தொடங்கியது. ஆயினும் அது அகன்றதாக இல்லை. ஆனால் ஜே.ஆர். ரின் பின் பதவியேற்ற பிறேமதாசா அன்றைய நிலையில் இந்திய எதிர்ப்பாளராக இருந்தமையால் இந்திய இராணுவத்தை ஆக்கிரமிப்பு இராணுவம் எனக் குறிப்பிடும் அளவிற்குச் சென்றார். இதன் உச்சக்கட்டமாக இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையும் வந்தது.

இதனைப்புரிந்து கொண்டிருப்பின் சிறிலங்காவின் அரசியல் குறித்து விளங்கிக் கொள்வதற்கு சதீஸ் நம்பியார் பெரிதும் சிரமப்படத் தேவையில்லை. இலங்கையில் இந்திய இராணுவம் பெற்றுக் கொண்ட அனுபவமே போதுமானதாகும். ஆனால், இது மட்டும் தான் உதாரணம் என்பதல்ல, அதன் பிற்பாடும் பல சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

இலங்கையில் சமாதான முயற்சிகளில் நோர்வே அரசு ஈடுபட வேண்டும் என ஆரம்பத்தில் அதனிடம் கோரியவர்கள் பொ.ஐ.முன்னணி ஆட்சியாளர்களே. குறிப்பாக சனாதிபதியே ஆகும். சனாதிபதிசந்திரிகா சண்டையையே விரும்பினார். ஆயினும் அன்றைய அரசியல்-பொருளாதார சூழ்நிலையானது சமாதானப் பேச்சுக்கள் குறித்து அவர்களைப் பேசத் தூண்டியது. ஆனால், சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நோர்வே அரசு மீது கடுமையான குற்றச்சாட்டையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தினர். பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தில் பிரதமராக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்கா நேரடியாக அவமானப் படுத்துவது போன்றே நடந்தும் கொண்டார்.

இவ்வாறு, அழைப்பதும் பின்னர் அவமதிப்பதும் வசைபாடுவதும் சிறிலங்கா அரசியலில் புதியதல்லத்தான். இருப்பினும் சதீஸ் நம்பியார் கவலை கொள்வதில் நியாயப்பாடு இல்லாமல் இல்லை. ஏனெனில் நோர்வே அரசு போன்று இரு தரப்பினரதும் (அரசாங்கம்-புலிகள்) அழைப்பின் பேரில் அவர் வந்தவரல்ல. சிறிலங்கா அரசின் அழைப்பின் பேரிலேயே வந்தவராகும். ஆகையினால், தம்மை அழைத்தவர்களே தம்மை அவமானப்படுத்துகையில் அவர் கவலைகொள்வதையும் தனது முடிவை மறுபரிசீலனை செய்வதையும் தவிர வேறு எதுதான் வழி.

ஆகையினால், தம்மீது அவதூறு சுமத்தப்படும் போது நம்பியார் கவலைகொள்வதில் நியாயப்பாடு உண்டு. விருந்தினராக அழைத்துவிட்டுத் தூற்றுவது போன்றுள்ளது சிறிலங்காவின் நடவடிக்கை. அதாவது சிறிலங்கா அரசாங்கம் சதீஸ் நம்பியாரைக் கௌரவமாக அழைத்தது போன்று கௌரவமாக வழியனுப்பி வைக்கத்தவறிவிட்டது.

ஆனால், சமாதான முயற்சிகளில் ஏற்பாட்டாளராகச் செயற்பட்டு வரும் நோர்வே அரசும் இதே போன்று பலதடவை அவமானத்தை சாந்தித்திருப்பினும் இருதரப்பினரின் அழைப்பு/அங்கீகாரம் என்பவற்றுடன் செயற்பட்டு வருவதினால் தமது செயற்பாட்டை நோர்வே தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இருப்பினும் நம்பியாருக்குக் கிடைத்துள்ள அனுபவமானது நோர்வேக்கு மட்டுமல்ல, சிறிலங்காவிற்கு உதவ முன்வருபவர் அனைவருக்கும முன்னுதாரணமாக அமையக் கூடியதாகும்.

# பாராளுமன்றைக் கலைத்து விட்டாலும் அதற்காக நாம் அஞ்சமாட்டோம்!

### -பிரதமரின் முயற்சிக்குப் பின்னடைவு என்கிறார் சமரசிங்க

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரத்தை அடுத்து அரசியல் வாதிகளிடையே பல்வேறு கருத்துக்கள் வெளிவருகின்றன. எனினும் சனாதிபதி பாராளுமன்றைக் கலைப்பதில்லை என எழுத்து மூலம் வாக்களித்துள்ளார். அதற்கு மாறாக நடந்தால் அவரின் பிரகடனம் பொய்யாகிவிடும். எனினும் பாராளுமன்றத்தைக் கலைத்தாலும் நாம் பயப்படப்போவதில்லை. இவ்வாறு தொழில் வேலைவாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரவீர தெரிவித்தார்.

மத்துகமவில் தொகுதி அமைப்பாளர்கள் முன் உரையாற்றும் அமைச்சர் மேலும் கூறியதாவது; நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அபிவிருத்தியடையச் செய்தலில் பிரதமர் தம்மை அர்ப்பணித்துள்ளார்.இந்நிலையில் சனாதிபதியின் லொத்தர் சபை சுவீகரிப்பு அதனைப் பின்னடையச் செய்யும் ஒரு வழியானதாகவே எமக்குத் தோன்றுகின்றது.

புலிகள் இன்னும் சிலதினங்களில் பேச்சுக்களுக்கு வருவார்கள். நாட்டின் அபிவிருத்திப் பணிகளை வெளிநாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஜுலை மாதமளவில் நாட்டுக்கு மில்லியன் கணக்கான உதவிகள் கிடைக்கவுள்ளன.இதனைப் பொறுக்க முடியாத பொ.ஐ.மு. அரசும் ஆதரவாளர்களுமே தற்போது அரசைக் கவிழ்க்கத் திட்டமிடுகின்றனர்.

நாங்கள் இந்த லொத்தர் சபை விவகாரத்தை பிரதமரோடு பேசித் தீர்க்குமாறு சனாதிபதியிடம் கேட்டுக் கொண்டுள்ளோம். அதற்கு அவர் இணங்காவிட்டால் மக்களோடு மக்களாய் நாம் வீதிக்கு இறங்கிப் போராடுவோம். மக்களின் முழு ஆதரவும் எமக்கே உள்ளது என்று அமைச்சர் கூறியுள்ளார்.

# புரிந்துணர்விற்கு அமைய நாட்டை நிர்வகிக்குக!

### *-கம்யூனிஸ்டுக்கள் வேண்டுகை*

அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரம் தொடர்பாக சனாதிபதியும், பிரதமரும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

1999 ஆம் ஆண்டு இடம் பெற்ற சனாதிபதித் தேர்தலில் சனாதிபதி மக்களின் ஆணையைப் பெற்றிருந்தார். அதே போல் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிரதம மந்திரிக்கும் இதேவிதமான மக்கள் ஆணை கிடைத்தது.

சனாதிபதியும் பிரதம மந்திரியும் சமகாலத்தில் மக்களின் ஆணையைப் பெற்றுள்ளனர். எனவே புரிந்துணர்வு அடிப்படையில் இருவரும் இணைந்து நாட்டை நிர்வகிக்க வேண்டும் என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோத வெடிமருந்துகளை வைத்துள்ள நபருக்குச் சிறை, அபராதம் அதிகரிப்பு

### - உள்துறை அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமாக வெடிமருந்துகளை வைத்திருப் போருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த அபராதமும் சிறைத் தண்டனையும் அதிகரிக்கப்பட்டிருப்பதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோருக்கு ஐந்து வருட கால சிறைத் தண்டனையும், இரு பத்தையாயிரம் ரூபா அபராதத் தொகையும் விதிப்பதற்கு ஏற்ற வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோருக்கு இரண்டு வருட சிறைத் தண்டனையும் இரண்டாயிரத்து ஐநூறு ரூபா அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மக்களின் முறைப்பாடுகளைத் துரிதமாக விசாரிக்க பொலிஸ் ஆணைக்குழு முடிவு!

(கொழும்பு)

பொலிஸ் ஆணைக்குழு பொது மக்கள் தெரிவித்துள்ள முறைப்பாடுகள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்துவது என தீர்மானித்துள்ளது.

இந்த முயற்சியின் பேரில் ஒன்பது மாகாணங்களிலும் அதிகாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஆணைக் குழுவின் தலைவர் ரஞ்சித் அபயசூரிய தெரிவித்துள்ளார்.

அதிகாரிகளைத் தெரிவு செய்வதற் கென அண்மையில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளில் 15 பரீட் சார்த்திகள் சமூகமளித்திருந்தனர்.இளைப்பாறிய சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் குழு வொன்று தெரிவு செய்யப்பட்டுள் ளது. இவர்கள் பொலிஸ் அதிகாரி களின் குறை பாடுகள் பற்றியும் பொது மக்களின் முறைப்பாடுகள் பற்றியும் விசார ணைகளை நடத்து வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிரிக்கெட் பயிற்றுனராக ஜோன் டைசனை இணைப்பது பற்றி ஆலோசனை

சிறிலங்காவின் புதிய கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜோன் டைசனை நியமிப்பது தொடர்பாக சிறிலங்கா இடைக்கால கிரிக்கெட் சபை பலசுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

முன்னாள் பயிற்சியாளர் டேவட்மோரின் சேவைக் காலத்தை நீடிக்காது தற்காலிக பயிற்சியாளராக துவிப் மென்டிசை இடைக்கால சபை நியமித்திருந்தது. பயிற்சியாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக அணி உறுப்பினர்களிடம் கருத்துக் கேட்ட போது வெளிநாட்டுப் பயிற்சியாளரையே அவர்கள் விரும்புவதாகத் தெரிகிறது எனவும் செய்தி வெளியாகியுள்ளது.

ஜோன் டைசன் அவுஸ்திரேலியாவின் முன்னாள் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் இவர் 2 டெஸ்ட் போட்டிகளில் சதம் அடித்தவரும் மேல் நோக்கி வரும் பந்துகளைப் பிடிப்பதில் வல்லவருமாவார்.




# சிறிலங்கா-பாகிஸ்தான் அணிகள் இன்று மோதும்

சிறிலங்காவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாங்க் அல்பா கிண்ண முக்கோண ஒரு நாள் போட்டியின் இரண்டாம் சுற்று ஆட்டம் இன்று ஆரம்பமாகின்றது.

இன்றைய போட்டியில் பாகிஸ்தான் சிறிலங்கா அணிகள் மோதுகின்றன.

சிறிலங்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் கலந்து கொள்ளும் இத்தொடரில் முதல் சுற்று ஆட்டத்தில் மூன்று அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றுள்ளன. இதில் நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் போனஸ் புள்ளிகளைப் பெற்று முன்னிலை வகிக்கின்றன.

இந்த நிலையில் இன்றையபோட்டி சிறிலங்கா அணிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

மேற்படி போட்டிகள் கொழும்பு நகரில் நடைபெற இருந்தது. காலநிலை சீரின்மையால் அனைத்துப் போட்டிகளும் தம்புள்ளையிலேயே நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மொறோக்கோவில் நடைபெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதல்களில் சேதமடைந்த கட்டடங்கள் (செய்தி 3ஆம் பக்கத்தில்)

## கண்பரிசோதனை

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கண்பார்வை குறைந்த நாற்பது வயதிற்கு மேற்பட்டோருக்கு இன்று கண்பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளது. இக்கண்ணாடி வழங்கல் ஆழியவளையில் அமைந்த தியாக தீபம் திலீபன் மருத்துவ மனையில் இடம்பெறும்.

இக் கண்பரிசோதனை முகாம் முற்றும் இலவசமானது. வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் உதவியுடன் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற வள்ளியம்மாள் ஞாபகார்த்தமாக நடாத்தப்படுகின்றது. அத்துடன் குருதி அமுக்கம், சலரோகம் ஆகிய நோய்களுக்கும் பரிசோதித்து மருந்துகள் வழங்கப்படும். (11)

# மட்டு. மாவட்டத்தில் மீனவர்களிடமிருந்து அதிரடிப்படையினரால் மீன்கள் அபகரிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தின் நகரத்தின் தென்பகுதியில் முகாமிட்டிருக்கும் விசேட அதிரடிப் படையினர் கடற்கரைக்குச் சென்று மீனவர்களைத் துன்புறுத்தி முறைகேடான முறையில் மீன்களை அபகரித்து வருவதாக அப்பிரதேச பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

புதுக்குடியிருப்பு, செட்டிபாளையம், களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் தினமும் காலையிலும், மாலையிலும் கடற்கரைப் பகுதிக்குச் சென்று கடற்தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவரின் மீன்களை முறைகேடான முறையில் அபகரித்து வருவதாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தினமும் ஒவ்வொரு பிரதேசத்திலிருந்து 6000 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான மீன்களை பலாத்காரமாக எடுப்பதால் தங்களின் தொழில் இயல்பு நிலையில் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவுபகலாகக் கடலில் கஷ்டப்பட்டு மீன் பிடித்து அதை விற்று பயன் எடுக்கமுடியாது இலவசமாக மீன்களைக் கொடுப்பதால் இப்பிரதேச மக்களின் மீன்பிடித் தொழிலில் வீழ்ச்சி கண்டுள்ளதாகவும், தாங்கள் பாவிக்கும் மீன்பிடி உபகரணங்களுக்கோ, இயந்திரப் படகுக்கு பாவிக்கும் பெற்றோல் செலவுகளுக்கோ, பிடிக்கும் மீன்கள் போதாது கஷ்டப்படும் இவ்வேளையில் இவர்கள் தினமும் வந்து தங்களின் வருமானத்தைப் பறித்தெடுப்பதால் இதை யாரிடம் கூறுவதென்று தெரியாமல் தயக்க நிலையிலும், அச்சத்திலும் மீனவர்கள் இருப்பதாக அந்தப் பொது அமைப்புகள் கூறியுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னும் இம்முறைகேடான செயலில் விசேட அதிரடிப் படையினர் நடந்து கொள்வதன் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக நடந்துகொள்வதாகவும், இன்னும் தமிழினம் நசுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்பதை வலியுறுத்தி, அச்சம் காட்டி பறிமுதல் செய்வது தடுக்கப்பட வேண்டுமெனவும் அந்த அமைப்புகள் மேலும் தெரிவித்துள்ளன.

# மருதனா மடத்தில் ஒருவர் கழுத்து வெட்டிப் படுகொலை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளையிலுள்ள இளைஞர் புனர்வாழ்வு முகாமின் மொழி பெயர்ப்பாளரான அரியரட்ணம் பிறேமச்சந்திரன் (வயது 52) என்பவர் நேற்று முன் தினமிரவு மருதனா மடத்தில் வைத்து இனம் தெரியாதவர்களினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு நண்பர் ஒருவரைச் சந்தித்துவிட்டு இரவு 9.00 மணியளவில் தனியாக மோட்டார் சைக்கிளில் வீடுதிரும்புகையில் வழி மறித்து கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவரது வீட்டிலிருந்து 200 மீற்றர் தொலைவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

- தற்கால அரசியல் நிலைப்பாடு குறித்து -

# வவுனியா மாவட்டத்தில் கலந்துரையாடல்கள்

(அலுவலக செய்தியாளர்)

விடுதலைப்புலிகளின் தற்கால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக வவுனியா மாவட்டத்தில் கலந்துரையாடல்கள் நடைபெற்றுவருகின்றன.

வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுக்களினால் நடத்தப்படும் இக்கலந்துரையாடல்களில், சமாதானப்பேச்சுக்களில் இருந்து விடுதலைப் புலிகள் தற்காலிகமாக விலகிக் கொண்டமைக்கான காரணங்கள், எதிர்கால நிலைப்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுவருகின்றது.

இக்கலந்துரையாடல்களில் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்து வருகின்றனர். (11)

# பிரான்சில் வாகன விபத்து; 28 உல்லாசப் பயணிகள் பலி!

(பாரிஸ்)

பிரான்சின் உல்லாசப்பயணிகள் சென்ற வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 28 பேர் பலியாகி உள்ளனர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது. இந்த உல்லாசப் பயணிகள் அனைவரும் ஸ்பெயினுக்குச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்துக்குள்ளாகினர். காலநிலை சீரின்மை காரணமாக விபத்து ஏற்பட்டது.

# திருமலையில் அனல் மின்நிலையம்; திட்டத்தை அரசு கைவிட்டது!

திருகோணமலையில் அனல்மின் நிலையம் அமைக்கும் திட்டத்தைத் அரசாங்கம் கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பொது மக்களினதும் சூழலியலாளரினதும் கடுமையான எதிர்ப்பையடுத்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

300 மெகாவாற் மின்சக்தி வழங்கும் இம்மின் நிலையத்தை அம்பாந்தோட்டையில் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரிபொருள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன் திருகோணமலை சென்றிருந்த மின் சக்தி அமைச்சர் கரு ஜெயசூரியவிடம் நுவரெலியாவில்லை. நுவரச்சோலையில் இம்மின் நிலையத்தை அமைப்பதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இப்போது இந்த மின் நிலையத்தை அம்பாந்தோட்டையில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதுடன் வரும் ஜூலை மாதம் மின் நிலையத்தை அமைப்பதற்கான வேலைகள் தொடங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### யாழ்....

தாய்லாந்தில் ஆரம்பமான பேச்சுவார்த்தைகள் சீரான வழியில் போய்க்கொண்டிருக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே.

அவ்வாறு இருக்க, திடீரென வாஷிங்டனில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டிற்கு விடுதலைப் புலிகளுக்குஅழைப்புத் தரப்படாதது மக்கள் மனதில் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஏமாற்றத்தைத் தந்தவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டியது அவர்களின் தார்மீகக் கடமையாகும். இதனால், அவர்கள் பேச்சுவார்த்தைகளை தற்காலிகமாக இடை நிறுத்தி இருப்பதாக அறிவித்துள்ளனர்.

இங்ஙனம் விடுதலைப் புலிகள் அறிவித்தமையைத் தொடர்ந்து தன்னம்பிக்கை இழந்த சிலரிடையே திரிபுடைய எண்ணங்கள் தோன்றியுள்ளன.

இதன் வெளிப்பாடுகளாக சமாதானப் பேரணிகளும், சமாதானக் கூட்டங்களும், ஊர்வலங்களும் இடம்பெறுகின்றன.

புத்தி ஜீவிகள் உள்ள யாழ். மண்ணில் தமிழீழ விடுதலைப் புலிகளது அரசியலும் இராஜதந்திரமும் சமாதானத்தின் பால் அவர்கள் கொண்டுள்ள விருப்பும் தமிழீழ மக்களின் நிம்மதியான வாழ்வும் அவர்கள் கொண்டுள்ள பற்றும் பாசமும் புரியாதிருக்க முடியாது. இவ்வளவுக்கு யாழ்ப்பாண மக்கள் வெறும் மரமண்டைகள் அல்ல.

இவர்களுக்கு மூவினப் பேரணிகள், ஈரின பேரணிகள் என பாகுபாடு போல் பேரணிகள் வேண்டியதில்லை.

சமாதானம் என்கின்ற பொக்கிஷத்தை பெறுவதற்காகத்தான் கணக்கற்ற உயிர் விலையும் கொடுக்கப்பட்டன. பொருளாதாரம் இழக்கப்பட்டது.

இவை யாவும் இந்த மக்களால்தான் நிறைவேற்றப்பட்டது.

இவற்றையெல்லாம் புரிந்து கொள்ள முடியாதவர்கள் புதிது புதிதாக நேற்றுப் பெய்த மழைக்கு முளைக்கும் காளான்களாய் சமாதான ஊர்வலங்கள் பேரணிகள் பவனி வருவது காலத்திற்குத் தேவையில்லாத ஒன்று என்று கூறலாம் எனவும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாணத்திலும்.....

சேர்ந்த மெதடிஸ்த திருச்சபை கிறிஸ்தவ மக்கள் நேற்று முன் தினம் இப்பேரணியில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபை முன்பாக ஆரம்பமான இந்தச் சமாதானப் பேரணி, கோட்டைமுனை மணிக்கூட்டு கோபுரம் வழியாக நகர்ந்து பல இடங்களுக்கும் சென்றது.

இதில், ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கொழும்பு, காலி, வவுனியா, திருகோணமலை, பொலநறுவை, அனுராதபுரம், அம்பாறை, யாழ்ப்பாணம் உட்பட பல பாகங்களையும் சேர்ந்த கிறிஸ்தவ மக்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை, யாழ். புனித யுவரியா தேவாலயம் முன்பாக உண்ணாவிரதமும், அமைதிப் பிரார்த்தனையும் நடைபெற்றுள்ளது.

யாழ். மறை மாவட்ட முன்னேற்ற நடுநிலையம் ஏற்பாடு செய்த உண்ணாவிரதத்திலும், அமைதிப் பிரார்த்தனையிலும் சர்வமதங்களையும் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டுள்ளனர். முடிவில் சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்தக் கோரும் மகஜர்கள் நடுநிலைய இயக்குனர் அருட் சகோதரர் ஜெயக்குமாரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள தேக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தப்படாத பேச்சுவார்த்தைகளினால் மக்கள் வேதனையையும், விரக்தியையும் அடைந்தது மட்டுமன்றி நம்பிக்கையையும் இழந்து வருவதாக அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நோர்வே.....

பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசியிருந்தனர்.இந்தப் பேச்சுக்களின் தொடர்ச்சியாக நாளை மீண்டும் வன்னி வந்து நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

### முட்டுக்கட்டை....

தரப்பினருடனும் மாறிமாறிப் பேச்சுக்களை நடத்தி வருகின்றோம் என நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இடம் பெற்ற சந்திப்பை அடுத்து செய்தியாளர்களுக்கு கருத்துக் கூறும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாம் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேசிய விடயங்கள் தொடர்பாக கொழும்பு சென்றவுடன் சிறிலங்கா அரசுடன் பேசி அவர்களின் பதில் முடிவுகளோடு மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளோம்.

எப்படியாவது தற்போதைய நெருக்கடி நிலைமையை முடிவுக்கு கொண்டுவந்து பேச்சுக்களைத் தொடர வைப்பதில் நாம் அக்கறையோடு செயற்பட்டு வருகின்றோம்.

அத்துடன் சர்வதேச சமூகத்தின் பங்களிப்போடு வடக்கு கிழக்கில் ஒரு சிறப்பான அபிவிருத்திக் கட்டமைப்பை உருவாக்கி உடனடி மனிதாபிமான கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கவேண்டும்.

வடக்கு கிழக்கின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பேச்சுக்கள் தொடர வேண்டும் என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்தவேளைகொழும்பில் தற்போது எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் என்ன என்று கேட்ட போது அது பற்றி தான் விபரிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

### டோக்கியோ....

ஆயுதப் போர் ஒன்று ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. இடம்பெறவும் நாம் இடமளிக்கக் கூடாது. இன்றும் கூட விடுதலைப்புலிகள் சமாதானத்தின் பக்கம் நின்று பேசும் விருப்பமுடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

இதை சர்வதேசத்திற்கு எடுத்துக் கூற வேண்டிய கடப்பாடு தமிழ்க் கூட்டமைப்புக்கு உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சதீஸ் நம்பியார்......

காரம் மற்றும் கடல் வலயம் தொடர்பான கண்காணிப்புக் குழுவின் ஆலோசனைகள் குறித்தும் ஆராயப் பட்டுள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பில் தாம் அரசாங்கத்திற்கு விளக்கி உள்ள அறிக்கை குறித்தும் இந்திய அதிகாரிகள் சனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக மிகக் கவனமாக அணுக வேண்டிய தேவை உள்ளது. அத்துடன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கடற் பிராந்தியம் தொடர்பாகச் சமர்ப்பித்த யோசனை ஏற்கக் கூடியதல்ல என்றும் இச்சந்திப்பில் சனாதிபதி கூறியுள்ளார்.


## மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவு

அறிவித்தல்

மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள மகளிர் அணிக்கான சர்வதேச தர பயிற்சிகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இது தொடர்பான ஒன்றுகூடல் 20.05.2003 காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் தலைமைப் பணிமனையில் நடைபெறவுள்ளது. எனவே, மகளிர் அணியில் இணைந்து கொள்வதற்காக விண்ணப்பித்தவர்கள் மற்றும் புதிதாக இணைந்து கொள்ள விரும்புவோர் நேரில் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(சி-7874)

நடுவப் பணியகம்,
வன்னிப் பிராந்தியம்,
கிளிநொச்சி.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.